30th July 1962]

இயங்கும் நூல்நிலையம் (கன்னியாகுமரி மாவட்டம்)

* 810 கேள்வி.—திரு. அ. சுவாமிதாஸ்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் இயங்கும் நூல்நிலையத்தை (Mobile Library) அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

(இ) இயங்கும் நூல்நிலையத்திற்கு 1961-62-ம் வருடத்தில் புத்தகம் வாங்கியதுண்டா?

(உ) தற்போது சில மாத காலமாக இயங்கும் நூல்நிலைய வாகனம் (Mobile van) செயல்படவில்லை என்பது சர்க்கார் கவனத்தில் பட்டதுண்டா?

(எ) உண்டெனில், அது செயல்பட என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) No, Sir.

(*c*) & (*d*) The Library van is under repair and the Mobile Library Unit will begin to function actively after the van is repaired.

விற்பனை வரி (விலக்களித்தல்)

* 811 கேள்வி.—திரு. சா. கணேசன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில், வீணை, தம்புரா முதலியவற்றைச் செய்யும் இசைக் கருவிச் சிற்பிகள் விற்பனை வரியால் அல்லற்படுவதும், அதன் காரணமாக அவர்களின் தொழிலுக்கே ஊறு நேர்ந்திருப்பதும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதா?

(இ) அவர்களுக்கு நிவாரணம் அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

THE HON. SRI R. VENKATARAMAN: (அ) Yes, Sir.

(இ) On a representation received in 1960, the request was examined and the rate of sales tax on musical instruments was reduced from 6 per cent to 4 per cent. A representation has recently been received from certain producers of musical instruments in Thanjavur. This is being examined.

திரு சா. கணேசன்: தொழிற்சாலை போன்று அமைத்து தயாரித்துக் கொடுக்காமல் தனிப்பட்ட ஆச்சாரிமார்களாக இருக்கிறார்கள்; தனிப்பட்டவர்களிடம் ஆர்டர் வாங்கி அதைச் செய்து அவர்களுக்குக் கொடுத்து அதில் கிடைக்கும் கூலியால் வாழ்ந்து வருகிற சாதாரண தொழிலாளர்களாகத்தான் அவர்கள் பெரும்பாலும் இருக்கிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆகவே அவர்களுக்கு இந்த

மாதிரி விற்பனை வரி போடுவது இந்த இசை வளர்ச்சியை ஓரளவிற்குப் பாதிக்கும் என்பதை அரசாங்கம் ஏற்று அதற்கு முழு நிவாரணமும் அளிக்க முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது நிபுணர் சிபார்சு. டாக்டர் லோகநாதன் அவர்கள் அறிக்கையில் 6 சதவிதம் போட வேண்டுமென்று அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். சர்க்கார் பரிசிலனை செய்து அதை 4 ஆக குறைத்து. மறுபடியும் இது சிங்கில் பாயின்டில் இருந்து மல்டி பாயின்டிற்கு போகவேண்டுமென்று இன்னொரு நிபுணர் பார்த்துச் சொல்லவேண்டும். சர்க்கார் ஒவ்வொரு தடவையும் மாற்றிக் கொண்டே இருக்கக்கூடாது.

* 812 **கேள்வி.—திரு. கே. ஆர். முனிரத்தினம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கிழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சோப்பு தயாரிப்புக்கு ஒருமுனை விற்பனைவரி போட்டிருப்பதை தள்ளித்தர உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

Government Transport Workers (batta)

* 813 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to place on the table of the House a copy of the orders issued by the Government, revising the daily batta payable to conductors and drivers of the State Transport?

THE HON. SRI R. VENKATARAMAN : A copy [a] of the orders issued by the Government revising the daily batta payable to conductors and drivers of the State Transport Department is placed on the table of the House.

திரு. மீ. கலியாணசுந்தரம் : ஸார், 4 மணி நேரம் பூர்த்தியாக வேலை செய்தால் ரூ. 1.10 ந.பை. பேட்டாவாகவும், 10 ந.பை. தனியாக போனஸாகவும் கொடுக்கவேண்டும் என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஏற்கனவே அவர்கள் வாங்கிக்கொண்டிருப்பது ரூ. 1.12 ந.பை. ஆகவே இப்போது கைமேல் கிடைப்பது ரூ. 1.10
9-30 உ.ம. ந.பை. என்றிருப்பதால், இதை அதிகமாக்கி கொடுக்க சர்க்கார் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மொத்தத்தில் ஜாஸ்தியாக கிடைக்கிறது. 1 ரூ. 10 ந.பை. பேட்டாவாகவும், மேற்கொண்டு 10 ந.பை. போனஸாகவும் கொடுக்கப்படுகிறது. இதன்படி பார்த்தால் 1.20 ஆகிறது. முன்பு வாங்கிக்கொண்டிருந்தது 1.12 தான்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: இப்போது கைமேல் கிடைப்பது ரூ. 1.10 தான். நான்கு மணி நேரம் வேலை செய்தால் 10 ந. பைசா. வும், ஆறு மணி நேரம் வேலை செய்தால் 15 ந.பைசாவும், 8 மணி நேரம் வேலை செய்தால் 25 ந. பைசாவும் போனஸாக கொடுப்பதற்கு வசூலிக்கப்படுகிறது. இப்போதுள்ள நிலைமையில் விலைவாசி உயர்ந்திருக்கின்ற இந்த நேரத்தில் ஒரு சாப்பாடு ஒரு ரூபாய்க்கு

---

a Printed as Appendix V on pages 871-874